

தனி பிரதி
ரூ.10/-


PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 45 | பாரிப்பு 11 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூலை 2014

## ஜூலை திங்களில் பிறந்த நாள் காணும் கர்மவீரர் காமராஜர்



❖ படிக்காத மேதையே !
நீதான்
தேசத்தை நிரப்ப
உன் வாழ்க்கையையே
காலியாக
வைத்திருந்தவன் !

❖ கம்பீரம் என்றதும்
நீ
கட்டிய அணைகளும்
எளிமை என்றதும்
நீ
கட்டிய ஆடைகளுமே
நினைவிற்கு வருகின்றன!

❖ விருதுப்பட்டியில்
அன்று பள்ளிக்கூடம்
அழைத்தும்
நீ போனதில்லை !
பிறகோ...
நீதான்
அந்தப்
பள்ளிக் கூடங்களையே
அனேகப் பட்டிகளுக்கும்
அழைத்துப் போனாய் !

❖ இந்தியாவின்
இரண்டாம் மகாத்மாவே !
நாங்கள்தான்
தவறாய் சில சமயம்
தவமிருந்தோம் !
ஆனாலும் நீ
வாழ்ந்தவரை
எங்கள்
வரமாகவே இருந்தாய் !

- நெல்லை ஜெயந்தா.

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms.822 நாள்.27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

# 07.06.2014 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்





# 07.06.2014 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 11 (2013 - 2014)

## தொடரும்
## நம் பயணம் .......



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

2007 ஆம் ஆண்டு முதல் ஊட்டுப் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் பதவி பெற்ற 154 இளநிலைப் பொறியாளர்களின் பதவிகளை பணிவரன்முறை [Regularisation] செய்ய கருத்துரு கோரி 30.04.2014 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பெரும்பாலான தலைமைப் பொறியாளர்களிடமிருந்து கருத்துரு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை.

மேலும் பகுதி நேர பட்டப்படிப்பு படித்த இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி பெயர் மாற்றம் செய்வதற்காக கருத்துரு கோரி 10.04.2014 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கருத்துருக்களும் இன்னும் முழுமையாக முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை.

எனவே மையச் சங்கப் பொறுப்பாளர்கள் கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் சம்பந்தப்பட்ட தனி நபர்கள் மேற்கண்ட கருத்துருக்கள் உடனடியாக முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அரசுக்கு அனுப்ப தேவையற்ற கால தாமதம் ஏற்பட்டு வருகிறது. நாம் பலமுறை வலியுறுத்தியும் சம்பந்தப்பட்ட இருக்கையாளர்கள் மெத்தன போக்கை கடைபிடித்து வருகிறார்கள். உடனடியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பொதுப்பணித்துறை சிறப்பாக செயல்பட தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் மிகவும் அவசியம் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். நமது கோரிக்கையை ஏற்று தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை உருவாக்க அரசுக்கு கருத்துரு அனுப்ப ஆவண செய்த முன்னாள் முதன்மை தலைமைப் பொறியாளர் பொறியாளர். R. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 20.06.2014 அன்று முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு A.P.J அப்துல்கலாம் அவர்களை நேரில் சந்தித்து நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துக் கொள்ள வேண்டினோம். அடுத்த சென்னை விஜயத்தின் போது கலந்துக்கொள்ள போவதாக உறுதியளித்தார். எனவே நூற்றாண்டு நிறைவு விழா தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்
வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு
தேச நலன் காப்போம்.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er. D. MURUGESAN, General Secretary
Cell Phone Nos. 9444 999 588, 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

**எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்யவும், எதற்கும், எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பதும், வெற்றி வாழ்வின் இரகசியம்.**

# 07.06.2014 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம் மற்றும் நூற்றாண்டு விழா சிறப்புக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 07.06.2014 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை பொறியியல் இல்லம் பொறியாளர் சி.ப. சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சென்னை கிளை சார்பாக சென்னை கிளைச் செயலாளர் பொறி. ரவி அவர்களும் மையச் சங்கம் சார்பாக வடக்கு மண்டல செயலாளர் பொறி. பாஸ்கர் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தன்னுடைய உரையில் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கூறினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும், சென்னை கிளை சார்பில் பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தனர்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார். இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய முரண்பாடு, 169 நபர்களுக்கு உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் பணிவரன்முறை, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்வது,, அரசாணை எண்.66, அரசாணை எண்.124, பணியிடை காலம் பிழை பொறுத்தல் கோப்பு, பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு, விதித்திருத்தம் (Amendment) உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

விதி திருத்த பிரதிநிதி பொறியாளர் திருவேங்கடமூர்த்தி அவர்கள் உரையாற்றினார்.

உறுப்பினர்கள் கருத்துகள் பகுதியில் பொறியாளர்கள் K. N. ரஞ்சன், பொருளாளர் கோவை - பொள்ளாட்சி கிளை, M. பக்கிரிசாமி, தலைவர் திருவாரூர் - நாகை கிளை, V. சிவபிரகாசம் பொருளாளர் தஞ்சாவூர் கிளை, S. பாண்டியன், பொருளாளர் சேலம் கிளை, M. தாணுமூர்த்தி, செயலாளர் கன்னியாகுமரி கிளை, K. R. ஜெயராமன், செயலாளர் திருச்சி கிளை, C. P. மோகன்குமார், செயலாளர் மதுரை கிளை ஆகியோர் உரையாற்றினார்கள்.

மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், T.P.பாலசுப்பிரமணியம், ஆகியோர் உரையாற்றினார்கள்.

மண்டலச் செயலாளர்கள் தங்கள் மண்டல செயல்பாடுகள் குறித்து பேசினார்கள்.

நிதிச் செயலாளர் பொறியாளர் A.நடராஜன் அவர்களால் 01.08.2013 முதல் 31.5.2014 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதிச் செயலாளர் பொறியாளர் என்.புண்ணியகோட்டி அவர்கள் 01.08.2013 முதல் 31.05.2014 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

சென்னை கிளையின் தலைவர் பொறி. V. அரசன் அவர்கள் 30.06.2014 அன்று பணி ஓய்வு பெறுவதை முன்னிட்டு தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். நூற்றாண்டு விழா நடைபெறும் சமயத்தில் சென்னை கிளையின் தலைவர் பதவி காலியாக இருக்க கூடாது என்பதற்காகவும் சென்னை கிளை பொதுகுழுக் கூட்டம் நடத்தி தேர்தல் நடத்த இந்த நூற்றாண்டு விழா சமயத்தில் கால அவகாசம் இல்லை என்பதற்காகவும் மாநில செயற்குழுக் கூட்டத்தின் முழு ஒப்புதலோடு சென்னை கிளையின் அடுத்த தேர்தல் வரை இடைகால தலைவராக பொறி. S. சண்முகானந்தன் அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நூற்றாண்டு நிறைவு விழா குறித்து பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் பேசினார். மூத்தப் பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

சென்னை கிளை சார்பாக செயலாளர் பொறி. S. ரவி அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்களும் நன்றி கூற மையச் செயற்குழுக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

மையச் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்தி முடிப்பதற்காக கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது. மேலாண்மை குழுவுக்கு அனைத்து குழுக்களையும் கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது மேலும் தேவைப்பட்டால் மாற்றி அமைப்பது, அவசர முடிவுகள் எடுப்பது போன்ற அதிகாரங்கள் உண்டு என்று தீர்மானிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மேலாண்மை குழு<br>APEX Committee | பொறி. N.S. கௌரிசங்கர், மாநில தலைவர்<br>பொறி. M. பஞ்சவர்ணம், மாநில துணைதலைவர்<br>பொறி. D. முருகேசன், பொதுச் செயலாளர் |
| 2. | ஆலோசனை குழு<br>Advisory Committee | பொறி. R. வெங்கடசுப்பு<br>பொறி. C.P. சண்முகம்<br>பொறி. A.M. பாபு<br>பொறி. T.P. பாலசுப்ரமணியம்<br>பொறி. M. ஊர்காவலன் |
| 3. | வரவேற்பு குழு<br>Reception Committee | பொறி. S. கண்ணன், வெளியீட்டு செயலாளர்<br>பொறி. S. சண்முகானந்தன்<br>சென்னை கிளை தலைவர் மற்றும்<br>சென்னை கிளை பொறுப்பாளர்கள் |
| 4. | நிதிக்குழு<br>Finance Committee | பொறி. N.S. கௌரிசங்கர், மாநில தலைவர்<br>பொறி. M. பஞ்சவர்ணம், மாநில துணைதலைவர்<br>பொறி. A. நடராஜன், நிதி செயலாளர்<br>பொறி. N. புண்ணியகோட்டி,<br>பொங்கும் நிதி செயலாளர் |
| 5. | பத்திரிக்கை செய்தி,<br>அழைப்பிதழ், பேட்ச்,<br>போஸ்டர் குழு | கவிஞர் நெல்லை ஜெயந்தா<br>பொறி. C.P. மோகன்குமார்<br>பொறி. A. திருவேங்கடமூர்த்தி |
| 6. | முக்கிய பிரமுகர் உபசரிப்பு குழு<br>VIP Attachment Committee | பின்னர் அமைக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 7. | அரங்கு மேலாண்மை குழு<br>Hall & DIAS Management | பொறி. R. வேதமூர்த்தி கிழக்கு மண்டல செயலாளர் மற்றும் அனைத்து மண்டல செயலாளர்கள் |
| 8. | உணவு தயாரிப்பு மற்றும் உபசரிப்பு<br>Food Committee | பொறி. N. பாஸ்கர் வடக்கு மண்டல செயலாளர் மற்றும் அனைத்து மண்டல செயலாளர்கள் |
| 9. | கலை நிகழ்ச்சி | கவிஞர் நெல்லை ஜெயந்தா |
| 10. | மலர் வெளியீடு & விளம்பரம் | பொறி. N. கிருஷ்ணமூர்த்தி<br>முன்னாள் வெளியீட்டு செயலாளர்<br>பொறி. D. முருகேசன், பொதுச் செயலாளர்<br>பொறி. S. கண்ணன், செயலாளர் வெளியீடு |
| 11. | பரிசு பொருட்கள் வாங்குவது வழங்குவது<br>Compliments and Momento | பொறி. N. புண்ணியகோட்டி,<br>செயலாளர் பொங்கும் நிதி<br>பொறி. A. நடராஜன், செயலாளர் நிதி |
| 12. | ஒலி, ஒளி, புகைபடம், வீடியோ மேற்பார்வை<br>Audio & Video, Photos | பொறி. A. நடராஜன்,செயலாளர் நிதி<br>பொறி. S. ரவி, செயலாளர் சென்னை கிளை மற்றும் மின்துறை பொறியாளர்கள் |
| 13. | போக்குவரத்து<br>Transport | அனைத்து மண்டல செயலாளர்கள் &<br>அனைத்து கிளை பொறுப்பாளர்கள் |
| 14. | தங்கும் வசதி<br>Accomadation | பொறி. S. கண்ணன், செயலாளர் வெளியீடு &<br>சென்னை கிளை பொறுப்பாளர்கள் |
| 15. | மருத்துவ வசதி<br>Medical & Emergency | பொறி. S. சண்முகானந்தன்,<br>சென்னை கிளை தலைவர்<br>பொறி. A.மணிமாறன், சென்னை கிளை பொருளாளர் |

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளையின் துணை தலைவர் பொறியாளர். M. பாக்கியசாமி, உதவி செயற்பொறியாளர் ஓய்வு அவர்கள் தன் மகள் திருமண நன்கொடையாக ரூ. 1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளையின் உறுப்பினர் பொறி. A. ஹாஜகான், உதவி செயற்பொறியாளர் ஓய்வு அவர்கள் ஓய்வு ஊதிய நன்கொடையாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் M. நடராஜன், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ. 1600-ஐ (ரூபாய் ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) மையச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் உறுப்பினர் பொறி. S. அசோகன், இளநிலை பொறியாளர் அவர்கள் தன் மகன் திருமண நன்கொடையாக ரூ. 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# மையச் சங்க பொறுப்பாளர்கள் உரையாற்றுகிறார்கள்















## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்










## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்






# தமிழ்நாடு அரசு
# பொதுப்பணித் துறை

**அனுப்புநர்**
பொறி. இரா.ஏமராஜ், பி.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் நீஆது.,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

**பெறுநர்**
அரசு முதன்மை செயலாளர்,
பொதுப்பணித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 9.

**கடித எண் எஸ் 4(2) / 27376 / 2013 / நாள். 16.06.2014**

அய்யா,

**பொருள்:** நிறுவனம் - பொதுப்பணித்துறை - த.நா.பொ.சா.பணி தொகுதி - தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் - உருவாக்க கோருதல் - சம்மந்தமாக.

**பார்வை:** பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை - 5 கடித எண்: 1 / பொ.செ / 01-2013 / நாள்: 21.01.2013.

-------

பொதுப்பணித்துறையில் அரசின் அனைத்து திட்டப் பணிகள் மற்றும் அரசுக் கட்டடங்களைப் பராமரிக்கும் பணிகள் அனைத்தையும் முன் எடுத்துச் சென்று, ஆய்வு பணிகள் செய்வது முதல் மதிப்பீடு தயாரித்தல், பணிகள் ஒப்பந்தம் செய்த பின் ஒப்பந்தக்காரர்கள் முறையான தரத்துடன் பணிகளை செய்து முடிக்க உரிய கண்காணிப்பு பணிகள் மேற்கொண்டு பணப்பட்டியல் (Bill) தயாரித்து கொடுப்பது, திட்டப் பணிகள் முடிவுற்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வரை முழுவதுமாக பணிபுரியும் அலுவலர் பொதுப்பணித்துறையின் பிரிவு அலுவலர் (இளநிலை பொறியாளர் / உதவிப் பொறியாளர்) ஆவார்.

2. இந்த பிரிவு அலுவலகப் பணிகளை செவ்வனே செய்ய பிரிவு அலுவலர்களுக்கு களப்பணியிலும், அலுவலகப் பணியிலும் உதவி புரிய முன்பு தொழில் நுட்ப உதவியாளர்கள் பணிபுரிந்து வந்ததால், பிரிவு அலுவலகப் பணிகள் சிறப்பாக செய்யப்பட்டு வந்தது.

3. ஆனால் தற்போது பிரிவு அலுவலர்களுக்கு பணியில் உதவி செய்ய கிட்டதட்ட யாரும் இல்லை என்ற நிலை, தற்போது பெரும்பாலான பிரிவு அலுவலகங்களில் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மையான பணியாளர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டனர். காலி பணியிடங்களில் புதிய பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. ஏனெனில் பெரும்பாலும் பணியிடங்கள் உடலக பதவிகளாக (Body Constituted post) இருந்ததால் புதிய பணியாளர்கள் நியமிக்க முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் பிரிவு அலுவலர்களுக்கு களப்பணி மற்றும் அலுவலகப் பணிகளில் உதவி செய்ய மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள உதவியாளர்கள் யாரும் இல்லை. இதனால் பிரிவு அலுவலர்கள் தங்கள் சக்திக்கு அதிகமான கூடுதல் பணிச்சுமை மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகும் நிலைமை உள்ளது.

4. இதனால் அரசின் திட்டப் பணிகளை செய்து முடிக்க காலதாமதம் ஏற்படுதல், பணிகளை தொழில் நுட்பத்துடன் தரத்துடன் செய்ய சிரமம் ஏற்படுதல், அரசு சொத்துக்களை (கட்டிடங்கள், மரங்கள், கருவி தளவாடங்கள்) கண்காணித்து பாதுகாக்க சிரமங்கள் ஏற்படுதல் போன்ற நிலைமை உள்ளது.

5. ஒரு பிரிவு அலுவலருக்கு ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் களப்பணிகள் நடைபெறுவதால், பிரிவு அலுவலர் எல்லா வேலை தளத்திலும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. எனவே பணிகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்படுதல் மற்றும் தொழில் நுட்பத்துடன் கூடிய தரமான வேலைகளை செய்ய முடியாமை ஆகியவை ஏற்படும்.

6. எனவே இக்காலக் கட்டத்தில் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப கணினி பயன்பாடு முதலியன தெரிந்த பொறியியல் பட்டயப் படிப்பு படித்த (Diploma in Civil Engineering) தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் குறைந்த பட்சம் 500 பணியிடங்கள் உருவாக்கிடவும், பொதுப்பணித்துறை பிரிவு அலுவலகங்கள் சிறப்புடன் செயல்பட பிரிவுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் நியமிக்க ஆவன செய்யுமாறு அரசினை கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

7. அரசு ஆணை எண். 680 பொபது நாள். 23.03.1990-ன் வாயிலாக பணி நீக்கம் செய்யப்பட்ட இளநிலை பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்களை மீண்டும் பணியமர்த்த ஏதுவாக பொதுப்பணித்துறையில் 300 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடங்கள் உருவாக்க அரசாணை வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து அரசாணை எண் 408 பொ.ப (டி2) துறை நாள். 31.05.1995-ன் வாயிலாக பணி நீக்கம் செய்யப்பட்ட 154 இளநிலை பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை மீண்டும் பொதுப்பணித்துறையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டவர்கள் தற்போது இவர் அனைவரும் பதவி உயர்வில் இளநிலை பொறியாளர் / உதவிப் பொறியாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் இதுகாறும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளில் நூற்றுக்கணக்கான உடலகப் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உடலகப் பதவிகளில் பணிபுரிந்து தொழில்நுட்ப உதவியாளர்கள் இளநிலை பொறியாளர் / உதவிப் பொறியாளராக பதவி உயர்வில் சென்றுவிட்ட காரணத்தினால், அப்பதவிகள் காலாவதியாகியுள்ளது. 2013 - 2014 - ஆம் நிதியாண்டில் கட்டட அமைப்பினை பொறுத்தமட்டில் ரூ. 1800 கோடி அளவுக்கு பணிகள் மேற்கொண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. நீர்வள ஆதாரத்துறை பொறுத்த மட்டில் ரூ. 1300 கோடி அளவுக்கு பணிகள் மேற்கொண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆக மொத்தம் பொதுப்பணித்துறையினை பொறுத்தமட்டில் 3100 கோடி ரூபாய் அளவுக்கு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறையினை பொறுத்தமட்டில் பணிகளை செவ்வனே மேற்கொள்ள தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களை உருவாக்குவது என்பது மிகவும் அவசியமானது என்பதனை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. தற்போது தொழில் நுட்ப உதவியாளர் புதிய பணியிடங்கள் உருவாக்குவதினால்,

(i) பிரிவு அலுவலகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்கும், அரசின் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தி மக்களுக்கு விரைவாக அளிக்கவும் உதவியாக இருக்கும்.

(ii) பட்டயம் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

(iii) ஏற்கனவே பெரும்பான்மையான திட்டப் பணிகள் மற்றும் இதர மராமத்து பணிகளில் P.S. Charges என்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து தினக்கூலி அடிப்படையில் தொழில் நுட்ப பணியிடங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால் அரசுக்கு தனியாக பெரும் நிதிச்சுமை ஏற்படாது.

பொதுப்பணித்துறையினை பொறுத்தமட்டில் 763 நிரந்தர பிரிவுகள் 1515 தற்காலிக பிரிவுகள் ஆக மொத்தம் 2278 பிரிவு அலுவலகங்கள் இயங்கி வருகிறது. தொழில்நுட்ப உதவியாளரை பொறுத்தமட்டில் என்கேடர் பணியிடமாக 11 பணியிடங்கள் சிவில் பிரிவிலும் மற்றும் மின் பிரிவில் 10 பணியிடங்கள் மட்டுமே உள்ளன. இதுகாறும் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்கள் உடலக பதவியாகவே அரசு ஒப்பளித்து வழங்கியுள்ளது. தற்போது உள்ள நிலையில் பிரிவு அலுவலகங்கள் பணி, தொழில் நுட்ப உதவியாளர் பணியிடம் இல்லாமையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இவற்றை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு பொதுப்பணித்துறையில் சிறப்பான செயல்பாட்டை மேலும் செம்மைப்படுத்த துறையில் ஆணிவேரான பிரிவு அலுவலகங்களில் தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் உருவாக்க ஆவண செய்யுமாறு அரசினை கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொருள் தொடர்பாக தமிழ்நாடு பொறியியல் சங்கம் இவ்வலுவலகத்திற்கு அளித்த பார்வையில் காணும் கடிதத்தின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**இணைப்பு:-** 1. தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடிதம் நாள். 21.01.2013 நகல்.
2. அரசாணை எண். 680 பொபது நாள். 23.03.1990 நகல்.
3. அரசாணை எண். 408 பொபது நாள். 31.05.1995 நகல்.

இரா. ஏமராஜ்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., (ம)
தலைமைப் பொறியாளர், (பொது) பொபது.

**நகல்:-** பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை - 5.
/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /
கண்காணிப்பாளர்.

---

Finance (CMPC) Department,
Fort St, George,
Chennai - 600 009.

**Letter No. 27670 / Finance (CMPC) / 2014 - 1, dated: 28.05.2014.**

From
Thiru. K. SHANMUGAM, I.A.S.,
Principal Secretary to Government.

To
The Pay and Accounts Officer (South),
485, Anna Salai,
Nandanam,
Chennai - 600 035.

Sir,

**Sub:** W.P. Nos. 21525, 22423 of 2013 and batch cases - Filed challenging the orders issued in G.O. Ms. No. 242, Finance (PC) Department, dated: 22.07.2013 based on the recommendations of the Pay Grievance Redressel Cell - Judgement Order passed - Admission of Pay Bills / Pension / Family Pension - Further instructions issued - Regarding.

**Ref:** 1. G.O. Ms. No. 234, Finance (PC) Department, dated: 1.6.2009.
2. G.O. Ms. Nos. 254 to 338, Finance (PC) Department, dated: 26.08.2010.
3. G.O. Ms. No. 71, Finance (PC) Department, dated: 26.02.2011.
4. G.O. Ms. No. 242, Finance (PC) Department, dated: 22.07.2013.

5. Judgement Order of the Hon'ble Division Brench of Madras High Court, dated: 27.02.14 in W.A. Nos. 504 of 2012 and other batch cases and W.P. Nos. 13580 of 2011 / W.P. No. 21525 of 2013 and other batch cases.

6. Government Letter No. 46373 / Pay Cell / 13 - 8, Finance Department, dated: 27.03.2014.

7. Your Letter PAO (S) Rc. 20966 / 2014 / BAS 3 / U1, Dated: 20.05.2014.

-------

I am to invite your attention to the references cited.

2) In the Government Order first cited, orders have been issued revising the scales of pay of employees / teachers notionally with, effect from 1-1-2006 with monetary benefit from 1-1-2007. Based on the recommendations of One Man Commission 2010, orders were issued in Government Orders second cited, revising the scales of pay of various posts in Ordinary Grade scales of pay departmentwise notionally with effect from 1-1-2006 / 12-12-2007 with monetary benefit from 1-8-2010.

3) In the reference third cited, orders were issued downgrading the scales of pay of about 52 categories in various departments restoring to a level lower than the level that was prescribed by the One Man Commission recommendations, duly waiving the excess payments already made. However, the said Government Order was not implemented due to the "Interim Stay" granted by the Hon'ble High Court. Subsequently, based on the recommendations of Pay Grievance Redressal Cell, among others, the scale of pay of Assistant Engineers and other allied categories were revised downward from Pay Band - 3 Rs. 15600 - 39100 + Grade Pay of Rs. 5400 to Pay Band - 2 Rs, 9300 - 34800 + Grade Pay of Rs. 5100/-

4) In the reference fifth cited, the Hon'ble Division Bench of Madras High Court, dated 27-02-14 in W.A. Nos. 504 of 2012 and other batch cases and W.P. Nos. 13580 of 2011 / W.P. No. 21525 of 2013 and other batch cases among others, in para - 51 (v) has directed that the implementation of G.O. Ms. No. 71, Finance (PC) Department, dated: 26-2-2011 and G.O. Ms. No. 242, Finance (PC) Department, dated: 22-7-2013 in so far as it affects any category of Government Servants / Pensioners / Family Pensioners, which are not implemented as on today shall not be implemented till fresh decision is taken.

5) Considering the orders of the Hon'ble Division Bench of Madras High Court in the Government letter sixth cited it was clarified that there shall not be any reduction in the pay of the employees and pension of the pensioners / family pensioners pursuant to the orders issued in the Government Orders third and fourth cited till further orders from Government. The Pay and Accounts Officers / Treasury Officers / Sub Treasury Officers and Pension Pay Officer concerned were requested to admit the pay bills of the employees and in the case of pensioners / family pensioners without any reduction in pay / pension / family pension pursuant to the Government Orders referred above till further orders from Government.

6) In the letter seventh cited, the Pay and Accounts Officer has sought clarification as to whether the fixation of pay such as Assistant Engineer, Assistant Executive Engineers and Executive Engineers in Public Works Depatment, Automobile Engineer in Motor Vehicles Maintenance Department and other equivalent posts in other departments promoted after issue of G.O. Ms. No. 71, Finance (PC) Department, dated: 26-2-2011 / G.O. Ms. No. 242, Finance (PC)

Department, dated: 22-7-2013 for which scales of pay has been adopted based on One Man Commission recommendations can be admitted as per the Government Orders issued based on One Man Commission recommendations.

7) In this connection, I am directed to clarify that the instructions issued in the Government Letter sixth cited is also be applicable to all those employees promoted after the issued of Government Orders third and fourth read above, Hence, I am to inform that the bills presented by the Drawing and Disbursing Officers for fixation of pay of Assistant Engineer, Assistant Executive Engineers and Executive Engineers in Public Works Department Automobile Engineer in Motor Vehicles Maintenance Department and other equivalent posts in other departments in the higher scales of pay as per One Man Commission recommendations at Rs. 15600 - 39100 + Grade Pay of Rs. 5400/-, Rs. 15600 - 39100 + Grade Pay of Rs. 6600/- and Rs. 15600 - 39100 + Grade Pay of Rs. 7600/- shall be admitted until further orders from Government.

Yours faithfully,

sd/-

for Principal Secretary to Government.

Copy to:

All Heads of Department.

The Director, Motor Vehicles Maintenance Department, Chennai.

The Pay and Accounts Officers, Secretariat, Chennai - 9.

The Pay and Accounts Officer, (North / East) Chennai - 1/8.

The Pay and Accounts Officer, Madurai - 625 001.

All Treasury Officers / Sub - Treasury Officers.

Stock File / Spare Copy.

## இரங்கல் செய்தி

**தேனி கிளை உறுப்பினர் பொறி. R. ராஜாங்கம், பணி ஆய்வாளர் அவர்களின் தந்தையார் திரு. ராமசாமி தேவர் அவர்கள் 05.06.2014 அன்று இயற்கை எய்தினார்.**

**திருநெல்வேலி கிளை முன்னாள் உறுப்பினர் பொறி. V. ஆறுமுகம் பிள்ளை, உதவிப் பொறியாளர், ஓய்வு அவர்கள் 06.06.2014 அன்று இயற்கை எய்தினார்.**

**கன்னியாகுமரி கிளை உறுப்பினர் திருமதி. C. பிரேமலதா, பணி ஆய்வாளர் அவர்களின் கணவர் திரு. G. விஜயகுமார் அவர்கள் 07.06.2014 அன்று இயற்கை எய்தினார்.**

**கன்னியாகுமரி கிளை முன்னாள் உறுப்பினரும், முன்னாள் தென்மண்டல செயலாளரும், தமிழ்நாடு பட்டய பொறியாளர் பேரவை கன்னியாகுமரி கிளையின் தலைவருமான பொறி. C. சுந்தர், இளநிலை பொறியாளர், ஓய்வு அவர்கள் 16.06.2014 அன்று இயற்கை எய்தினார்.**

**கன்னியாகுமரி கிளையின் முன்னாள் உறுப்பினரும், கன்னியாகுமரி கிளை உறுப்பினர் பொறி. S. பொன்சிராபெல்லா, பணி ஆய்வாளர் அவர்கள் தந்தையார் பொறி. G. சாம்சோபி, உதவி செயற்பொறியளார், ஓய்வு அவர்கள் 20.06.2014 அன்று இயற்கை எய்தினார்.**

**திருச்சி கிளை உறுப்பினர் பொறி. A. அடைக்கன், இளம் பொறியாளர் அவர்களின் தந்தையார் திரு. A. ஆண்டிகோனார் அவர்கள் 18.06.2014 அன்று இயற்கை எய்தினார்.**

**இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.**

# ஜூன் 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

**Appointment of Technical Assistants as Assistant Engineers based on G.O. Ms. No. 1- Violation of Court Orders - Not to be regularised Reverting them back to their original posts.**

**Letter No. 001 / GS - AOE / 2014 - 34, Dated: 10.06.2014.**

To

The Engineer - in - Chief,
Water Resources Organisation and
Chief Engineer (General),
Public Works Department,
Chepauk, Chennai - 600 005.

Sir,

**Sub:** TNPWD - Establishment - TNES - Appointment of Technical Assistants as Assistant Engineers based on G.O. Ms. No. 1 - Violation of Court Orders - Not to be regularized Reverting them back to their original posts - Requested - Regarding.

**Ref:** 1. Hon'ble Tamilnadu Administrative Tribunal order dt. 17.04.1997 in OA Nos. 3348 / 94 , 4564 / 94 etc.,

2. Hon'ble High Court order dt. 06.11.2006 in W.P. No. 7523 of 1997.

3. The Engineer - in - Chief, WRO & CE (General), PWD Proceeding No. S2(2) / 29148 / 2004 - 23 Dated. 27.02.2006.

4. The Engineer - in - Chief, WRO & CE (General), PWD Proceeding No. S2(2) / 29148 / 2004 - 24 dated. 27 02.2006.

5. The Engineer - in - Chief, WRO & CE (General), PWD Proceeding No. S2(2) / 29148 / 2004 dated. 18.10.2007.

6. The Engineer - in - Chief, WRO & CE (General), PWD Proceeding No. S2(2) / 29148 / 2004 - 87 dated. 14.11.2007

7. The Engineer - in - Chief, WRO & CE (General), PWD Proceeding No. S2(2) / 84462 / 2007 - 7 dated. 24.11.2008.

8. Our Lr. No. 001 / GS - AOE / 2013 - 9 dt. 10.12.2013. addressed to E-In-C (B) & CE (GI), PWD.

In continuation of our representation to the Engineer - in - Chief (Buildings) & Chief Engineer (Buildings) Chennai Region & the Chief Engineer (General), PWD on the above subject vide reference 8th cited, we wish to reiterate the following for favour of kind consideration.

We are very much constrained to state that, the then Engineer - in - Chief, WRO & Chief Engineer (General), PWD has promoted 1 no of Technical Assistant (Junior Engineer appointed from the post of Technical Assistant) vide reference 3rd cited, 21 Nos. of Technical Assistant vide

reference 4th cited, 76 Nos of Technical Assistants (JEs appointed from the post of Technical Assistants) vide reference 5th cited, 2 Nos. vide reference 6th and 29 Nos. vide reference 7th cited for the post of Assistant Engineers by way of recruitment by transfer based on G.O. Ms. No. 1 PW (B2) dept. dated 02.01.1990.

We invite your kind attention in this regard and humbly submit the following for your kind consideration.

The post of Technical Assistants does not include either in the Tamil Nadu Engineering Services (TNES) Special Rules or in the Tamil Nadu Engineering Subordinate Services Rules (TNESS). The Government included the post of Technical Assistant as a feeder category post for Assistant Engineers by way of Recruitment by transfer by passing the G.O. Ms. No. 1 Public Works (B2) Department dated. 02.01.1990 and till now no amendments are issued in the relevant special rules for the TNES and TNESS respectively.

The appointments of Technical Assistants as AEs are purely temporary and are subjected to the outcome of W.P. No. 7523 of 1997 and liable to be terminated or reverted to their original post as and when the need arises.

The Hon'ble Tamilnadu Administrative Tribunal Chaired by Hon'ble Mr. Justice S. Pratap Singh passed a common order vide reference 1st cited, in which it was held in para - 37 (in OA No. 4564 / 94) that, till amendments are made appropriately, the statutory rules, as it now stands will prevail and hence the Technical Assistants do not come in as a feeder category from which recruitment by transfer can be made for the post of Assistant Engineers and rejected the claims of Technical Assistants as Assistant Engineers.

The Hon'ble Mr. Justice P. Sathasivam and Hon'ble Mr. Justice S. Tamilvanan in the High Court of Judicature at Madras in WP No. 7523 of 1997 dated 06.11.2006 also did not vary with the findings of the Hon'ble Tribunal order that the Technical Assistant post is not a feeder category for appointment to the post of Assistant Engineer.

The appointments of Technical Assistants as Assistant Engineers vide references 3rd to 7th cited are purely in violation of the existing statutory service rules and the orders of the Hon'ble High Court of Madras.

Also, those appointments were challenged before the Hon'ble High Court of Madras in Writ Petition No. 11148 / 2007 and Writ Petition No. 21344 / 2007. Also, SLP No. 2495 / 07 is filed before the Supreme Court of India against the G.O. Ms No. 1 PW (B2) department dated. 02.01.1990.

Our association is repeatedly requesting not to promote any more technical assistants for the post of Assistant Engineers and to revert the technical assistants already promoted as Assistant Engineers to their original posts by implementing the High Court judgement, as this will affect the legitimate turn or promotion and career prospects of regularly appointed TNPSC graduate Assistant Engineers of 2006 - 2007 batch and subsequent batches.

Our legitimate demand has to be met without further delay, as this causes the agitation among our member engineers.

Hence, we kindly request the Engineer - in - Chief, WRO and the Chief Engineer (General), PWD that the Technical Assistants who were already appointed as Assistant Engineers should not be reqularized at any cost and not to promote any more Technical

Assistants as Assistant Engineers until the disposal of the above Court cases and render justice to our member engineers.

Thank you

**Er. P. KARTHIKEYAN**
General Secretary / AEA

**Er. R. RAVIRAJ**
General Secretary / AOE

Copy to the Principal Secretary to Government, PWD, Fort St. George, Chennai - 9 for information.

# பரிசுத்த விவாக அழைப்பிதழ்

அன்புடையீர்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நிகழும் 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12-ஆம் நாள் (12.07.2014) சனிக்கிழமை, காலை 10.30 மணியளவில்

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு வளாகம், திரு. ம. பாக்கியசாமி - திருமதி பா. ஜெஸி
ஆகிய எங்களின் புதல்வி

**Dr. பா. சோபனா,** M.B.B.S.,


திருச்சி, ஐயப்பன் நகர், திரு. D. மாணிக்கம் - திருமதி மா. பாக்கியராணி
அவர்களின் புதல்வன்

**Er. மா. தீபக் அருள் மோகன்,** M.E.,


**இவர்களின் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருச்சி, திண்டுக்கல் ரோடு, நியூ டைமண்ட் மஹாலில்** (அரிஸ்டோ ஹோட்டல்) **நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கின்றோம்.**

**நிச்சயதார்த்தம்**

நாள் : 11.07.2014, வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 7.00 மணிக்குமேல்
இடம் : நியூ டைமண்ட் மஹால்,
திருச்சி (அரிஸ்டோ ஹோட்டல்)



**தங்கள் அன்புள்ள,**
**ம. பாக்கியசாமி,** B.E.,
உதவி செயற்பொறியாளர்,
பொதுப்பணித்துறை, திண்டுக்கல்.
**பா. ஜெஸி,**
**பா. பிரின்ஸ்**
திண்டுக்கல்.
செல். 94434 74840



## குங்குமத் தோட்டம்



| **செல்வன்** | **செல்வி** | **மணநாள்** | **நிகழ்விடம்** |
|---|---|---|---|
| **A. சீனுவாசன்,** M.C.A., B.Ed., | **S. ஐஸ்வர்யா,** D.I.T., | **29.06.2014** | மதுராந்தகம் |

த/பெ. S. அசோகன்,
இளநிலைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை (PWD), மதுராந்தகம்.

மணமக்களை வளம் பல பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 JULY 2014
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

# நூற்றாண்டு நிறைவு விழா

**கடந்த 20.06.2014 அன்று முன்னாள் இந்திய குடியரசு தலைவர் மேதகு A.P.J அப்துல்கலாம் அவர்களை நேரில் சந்தித்து நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துக் கொள்ள வேண்டினோம். அடுத்த சென்னை விஜயத்தின் போது கலந்துக்கொள்ள போவதாக உறுதியளித்தார். எனவே நூற்றாண்டு நிறைவு விழா தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.**

- பொதுச் செயலாளர்.

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 3.7.2014
Posting on 5.7.2014
REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. S. KANNAN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. K.P.THIYAGARAJAN AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223